1995 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

1. சென்னை பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு *6* உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

2. காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக ஆட்சி மன்றப் பேரவைக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

3. கோவை பாரதியார் பல்கலைக் கழக ஆட்சி மன்றப் பேரவைக்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து *3* ஆண்டுகள் ஆகும். இருப்பினும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவியின் காலம் முடியும்.

வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை *3.5.1995* புதன்கிழமை பிற்பகல் *3.00* மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் *4.5.1995* வியாழக்கிழமை பிற்பகல் *3.00* மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் *5.5.1995* வெள்ளிக்கிழமை பிற்பகல் *3.00* மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் *9.5.1995* செவ்வாய்க்கிழமை காலை *10.00* மணிக்கும் பிற்பகல் *2.00* மணிக்கும் இடையே சென்னை சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

6. கவன ஈர்ப்பு

(அ) குடியாத்தத்திலிருந்து ஆந்திராவின் சில பகுதிகளுக்கு பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வி. தண்டாயுதபாணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தத்திலிருந்து ஆந்திராவில் உள்ள பலமனேர், மதனப்பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த தமிழ்நாடு, ஆந்திர அரசு

[திரு. வி. தண்டாயுதபாணி] [1995 ஏப்ரல் 28

போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் நிறுத்தப் பட்டதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து" மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தடம் எண் 84 பி என்னும் பேருந்தை வேலூரிலிருந்து பலமநேருக்கு இயக்கி வருகிறது. 16.9.1994 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணையின்படி தமிழ்நாடு ஆந்திர மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தின் கீழ் மதனப்பள்ளி குடியாத்தம் (வழி) பலமநேர் தடம் இயக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஆந்திர மாநில போக்குவரத்து அதிகாரிகளிடம் உரிமம் பெறுவதற்காக பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் விண்ணப்பித்துள்ளது. இதற்கிடையில் மேற்கூறிய தடம் சம்பந்தமாக ஆந்திர அரசு போக்குவரத்துக் கழகத்தினால் இரு பேருந்து இயக்கத்திற்கும் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்து உரிமத்திற்கும் எதிராக திரு பாலாஜி என்பவர் ஹைதராபாத் உயர்நீதி மன்றத்தில் மேற்கூறிய மாநில அரசு வெளியிட்ட ஆணை சட்ட பூர்வமற்றது என்றும், தமிழ்நாடு மற்றும் ஆந்திர அரசு போக்குவரத்து அதிகாரிகள் வழங்கிய தற்காலிக உரிமம் செல்லத்தக்கதல்ல என்றும் வழக்கு தொடர்ந்து தடை ஆணை பெற்றுள்ளார். எனவே, குடியாத்தம்—மதனப்பள்ளி தடத்திற்கு உரிமம் ஒப்புதலளிக்க இயலாது என்று ஆந்திர மாநில அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் இச்சூழ்நிலையில் மேற்படி தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலையில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் உள்ளது. எனினும் உரிமம் சம்பந்தமான தடையை நீக்கக்கோரி ஹைதராபாத் உயர்நீதி மன்றத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் மனு தாக்கல் செய்துள்ளது. இம்மனு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தடை நீக்க உத்தரவு பெறப்பட்டவுடன் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் குடியாத்தம் - மதனப்பள்ளி தடத்தில், ஆந்திர மாநில போக்குவரத்துத் துறையிடம் உரிமம் ஒப்புதல் பெற்று இரு பேருந்துகளை இயக்க பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்கும்.

1995 ஏப்ரல் 28]

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளபடி ஆந்திராவிலுள்ள தனியார் பேருந்தினுடைய முதலாளி ஒருவர் இந்த தடங்களில் ஓடுகின்ற பஸ்களுக்கு தடையாணை வாங்கிய காரணத்தால் தான் அந்த பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் 10 நாட்களுக்கு முன்பாக அந்த பாலாஜி என்கின்ற தனிப்பட்ட முதலாளி அந்த தடையாணையை வாபஸ் பெற்றுக்கொண்ட காரணத்தால் ஆந்திர அரசு மட்டும் இப்போது பஸ்களை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி, ஆந்திர மாநில அரசு பஸ்களை ஓட்டுவதைப் போல பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகமும் பஸ்களை ஓட்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாஜி என்பவர் குடியாத்தத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவர் தான் அந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் பிள்ளையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டுகிற பழக்கம் உங்களைப் போன்றவர்களுக்கு இருக்கின்ற காரணத்தால் தான் இன்றைக்கு மக்களுக்கு பேருந்து வேண்டும் என்று கேட்கிறீர்கள்,. மற்றொரு புறத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டதாக சொன்னார்கள். அந்தக் குறிப்பு இங்கே இல்லை. வாபஸ் பெற்றதாக எங்களுக்கு தகவல் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல மனதோடு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவராக இருக்கின்ற காரணத்தால், குடியாத்தத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் வழக்கை வாபஸ் பெற்று இருக்கிறார் என்று சொன்னால் நாங்கள் உடனடியாக பேருந்துகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

நண்பகல் *12-00*

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாலாஜி என்பவர் பலமனேரிலே உள்ள வெங்கடேஸ்வரா டிரான்ஸ்போர்ட்டினுடைய உரிமையாளர். ஆகவே, அந்தத் தகவலே தவறான தகவல். அவர் வாபஸ் பெற்றுக்கொண்டாலும் ஆந்திராவிலேயுள்ள அந்த அரசாங்கம் தமிழ்நாட்டு மக்களுக்கும் சேர்த்து 3 பஸ்களை 10 நாட்களுக்கு இயக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் தகவல்களே கூட இன்னும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திடமிருந்து மாண்புமிகு

அமைச்சர் அவர்களுக்கு வரவில்லை என்று சொன்னால், இது மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமையாகும். அங்கே இருக்கின்ற மக்கள் பெரிதும் அல்லல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தயவு செய்து இந்த மூன்று பேருந்துகளையும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் உடனடியாக இயக்க முன்வருமா என நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற குறிப்பு இருக்குமேயானால் உடனடியாக எங்களுடைய பட்டுக்கோட்டை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக எனக்கு அந்தக் குறிப்பு வந்திருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாய்மொழியாகத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, வழக்குமன்றத்திலே இருக்கிற வழக்கு வாபஸ் பெறப்படவில்லை. ஆகவேதான் எங்களால் அந்தப் பேருந்துகளை இயக்க முடியவில்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிதாபமான நிலை என்று சொன்னார்கள். பரிதாபமான நிலை என்றைக்கும் காங்கிரசுக்கு இருக்குமே தவிர, எங்கள் இயக்கத்திற்கு இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தண்டாயுதபாணி, இரண்டு கேள்விகள்தான் கேட்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சருக்கு இன்பர்மேஷன் சரியாக வரவில்லை என்று சொன்னீர்கள்; அதை அமைச்சர் அவர்கள் சரிபார்த்து நடவடிக்கை எடுப்பார். (குறுக்கீடு) தவறான தகவல் கொடுக்கப்பட்டிருந்தால் அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் விசாரிப்பார். (குறுக்கீடு) அந்தமாதிரி இருந்தால் அதைப்பார்த்து அதுகுறித்து நடவடிக்கை எடுப்பேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார் இல்லையா? உட்காருங்கள். நீங்கள் நல்ல உறுப்பினராகத் தெரிகிறீர்கள். நான் இங்கே சந்தேகப்பட்ட பிரச்சினைக்காக கருப்புத் துண்டு போர்த்திக் கொள்ளாமல் இருக்கிறீர்கள் அல்லவா; அந்த அளவுக்கு நீங்கள் நல்ல உறுப்பினர்தான். உட்காருங்கள்.

(ஆ) நயினார் கோவில் ஒன்றியம்

வானியவல்லத்திலும், மூவலூரிலும் கூட்டுறவுப வர்லும் சொசைட்டிக் கட்டிடம் துவக்கப்படாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவனஈர்ப்பு. டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த